**த. நா.ச.பே. எண்: 49** **நாள் :10.05.2022**

**<u>தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை</u>**

**மாண்புமிகு முதலமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6-4-2022 அன்று நீர்வளத்துறையின் மானியக் கோரிக்கை விவாதமானது தொடங்கப்பட்டது. வரிசையாகப் பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கையானது நிறைவேற்றப்பட்டது. நேற்று, எனது கட்டுப்பாட்டில் இருக்கும் உள்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று இருக்கிறது. இறுதியாக உள்துறை மீதான விவாதம் நடக்கிறது என்றால், அனைத்துத் துறைகளிலும் இது கடைசியானது என்று பொருள் அல்ல.

அனைத்துத் துறைகளுக்கும் இந்தத் துறையானது அடிப்படையானது என்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) இறுதியாக விவாதம் நடத்தப்படுகிறது என்று நினைக்கிறேன். உள்துறையானது சரியாகச் செயல்பட்டால் மற்ற துறைகளின் பணிகளும் சிறப்பாகச் செயல்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என உளப்பூர்வமாக நம்புகிறேன். சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கும் மாநிலத்தில்தான் வளர்ச்சி என்பது இருக்கும்.

கடந்த ஓராண்டு காலமாக பல்வேறு துறைகளும் எத்தகைய வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பதை கடந்த ஒரு மாதகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்ற நடவடிக்கைகளின் மூலமாக நீங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். இத்தகைய அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு அடித்தளமான அமைதியை

உருவாக்கியது உள்துறைதான் என்பதை அனைவர்க்கும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்பு ஒருமுறை சட்டமன்றத்தில் நான் குறிப்பிட்டுச் சொன்னதையே இங்கு மீண்டும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ''அமைச்சர்கள் அனைவரும் இந்த அரசிடம் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை விரிவாகப் பேசினார்கள். உள்துறை சார்பில் என்னைக் கேட்டால், எதுவெல்லாம் இல்லை என்பதைத்தான் நான் சொல்ல முடியும்'' என்று சொல்லிப் பட்டியலிட்டேன்.

இந்த ஆட்சியில் வன்முறைகள் இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) சாதிச் சண்டைகள் இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) மத மோதல்கள் எழவில்லை; (மேசையைத் தட்டும் ஒலி) துப்பாக்கிச் சூடுகள் இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) அராஜகங்கள் இல்லை; (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் இந்த ஆட்சியின் மாபெரும் சாதனை; (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் உள்துறையின் மிக முக்கியமான சாதனையாக அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டு மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்துள்ளோம். இந்த அமைதியை உருவாக்கிக் கொடுத்தது தமிழ்நாடு அரசினுடைய காவல்துறை. இன்றைக்குத் தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியாக இருப்பதால்தான், வெளிமாநிலங்களுக்குச் சென்ற தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிற்கு மீண்டும் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. புதிய முதலீடுகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவிலேயே அமைதியான மாநிலம் தமிழ்நாடு; பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என்ற நற்பெயர் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசின் ஒரு கை, நிர்வாகம் என்றால்; இன்னொரு கை, காவல்துறை.

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரண்டும் முறையாக சரியாகச் செயல்பட்டால், அந்த அரசாங்கம் தலைசிறந்த அரசாங்கமாகப் பெயர் பெறும். அந்தவகையில் காவல் துறைக்குச் சில கட்டளைகளை நான் பிறப்பித்திருக்கிறேன்.

காவல்துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித் தரக்கூடிய துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல் துறை என்பது குற்றங்களே நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கித் தரக்கூடிய துறையாக மாறவேண்டும் என்பது என்னுடைய ஆசை; இந்த அரசினுடைய கொள்கை. (மேசையைத் தட்டும் ஒலி) குற்றங்கள் குறைய வேண்டும் என்பதைவிடக் குற்றமே நடைபெறாத சூழலை உருவாக்கும் துறையாக அது மாற வேண்டும்.

கொலை, திருட்டு, பாலியல் தொந்தரவு, போதை மருந்துகள் வன்முறைச் சம்பவங்கள் ஆகியவைதான் மிகப்பெரிய குற்றங்கள். இவை எந்தச் சூழலிலும் நடைபெறாத நிலையை உருவாக்குவதற்கு காவல் துறை திட்டமிட வேண்டும். எந்தச் சூழலிலும் பொதுமக்களுக்கு அச்சம் தரும் சம்பவங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அரசியல்ரீதியாகவோ, மதம் மற்றும் சாதி காரணமாகவோ வன்முறைகள் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி திட்டமிட்டு இந்த அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படுத்தும் வகையில் மோதல்கள் உருவாக்க நினைப்பவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேநேரத்தில், காவல் துறையும் யாராலும் கை நீட்டிக் குற்றம் சொல்ல முடியாத துறையாக இருக்க வேண்டும். எங்கோ ஒரு காவலர் செய்யக்கூடிய தவறு இந்த ஆட்சியின் தவறாக குற்றம் சாட்டப்படும். அவர்மீது நாம் நடவடிக்கை

எடுத்தாலும், ஆட்சியின் மீதான கறையாக அந்தச் சம்பவம் பேசப்படும். எனவே, காவல்துறையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் விமர்சனத்துக்கு இடமில்லாமல் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டும்.

ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்று பாராமல் சட்டத்தின் ஆட்சி நிலை நிறுத்தப்பட வேண்டும். எந்த திசையில் இருந்து அழுத்தம் வந்தாலும், சிபாரிசு வந்தாலும் நீங்கள் சட்டத்தின் பக்கமே நின்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில், அதிகாரிகளும் தவறு செய்துவிடக் கூடாது. தவறு செய்யும் அதிகாரிகளுக்கு இந்த அரசில் இடமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

போதைப் பொருட்களுக்கு நமது மாணவச் செல்வங்கள் அடிமையாவது மிக மிக கவலையளிக்கிறது. ஆகவே குட்கா விற்பனையைத் தடுத்து நிறுத்துங்கள்; போதைப் பொருட்கள் நடமாட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்குங்கள். போதையில் இருந்து இளைய சமுதாயத்தைக் காப்பது இன்றைய சூழலில் மிக முக்கியமானதாக நினைக்கிறேன். எந்த போதை மருந்து நடமாட்டமும் தமிழ்நாட்டில் இருக்கக் கூடாது.

கூலிப்படை வைத்துக் கொலை செய்த வழக்குகளை, விசாரணையை விரைந்து முடித்து, கூலிப்படைகளுக்கே முற்றுப்புள்ளி வையுங்கள். கூலிப்படை வைத்திருப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள் முழுமையாகத் துடைத்தெறியப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

தீயணைப்புத் துறையினர் ஆபத்தான கட்டிடங்களை ஆய்வு செய்து பாதுகாப்பினை உறுதி செய்யுங்கள். தீ விபத்துக்களை விரைந்து சென்று

தடுத்திடவும் முன்கூட்டியே நடைபெறாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊர்க்காவல் படையினரை அதிகம் பயன்படுத்துங்கள்; சமூக நல்லிணக்கப் பணிகளுக்கு அது மிக முக்கியமாக இருக்கிறது. மத துவேஷங்கள், தீவிரவாதச் செயல்களை முளையிலேயே கிள்ளி எறியுங்கள். மதம், சாதி வன்முறையைத் தூண்டும் பேச்சுகள் தடுக்கப்பட வேண்டும். இப்போது இந்த வன்முறைப் பேச்சுக்கள் இணையதளங்களில் அதிகமாகப் பரவி வருகிறது. இம்மாதிரியான ஆட்கள் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

கள்ளச்சாராயச் சாவுகள் இல்லாத தமிழகமாக மாறிட வேண்டும்; அதை உறுதிப்படுத்துங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அமைதி அது ஒன்றே உங்களது குறிக்கோள் என்று தமிழ்நாடு காவல்துறைக்கு நான் கட்டளையிட்டிருக்கிறேன். அப்படித்தான் தமிழ்நாடு காவல் துறையும் செயல்பட்டு வருகிறது. அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்த சில சம்பவங்களை வைத்து ஒட்டுமொத்தக் காவல்துறையையும் யாரும் களங்கப்படுத்த வேண்டாம். இது உயிரைப் பணயம் வைத்துப் பாடுபடக்கூடிய காவலர்களைக் கொச்சைப்படுத்தும் செயல் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துறையை மேம்படுத்த வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதற்காகத்தான் காவல் துறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் சி.டி. செல்வம் அவர்கள் தலைமையில் இந்த ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. கழக அரசால் அமைக்கப்பட்ட நான்காவது காவல் ஆணையம் இது. அதிலிருந்தே காவல் துறைமீதும், காவலர்கள் மீதும் கழக அரசு எத்தகைய அக்கறையுடன் இருக்கிறது என்பதை

நீங்கள் நன்றாக அறிவீர்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் உள்துறையின் முதல் மானியக் கோரிக்கையை தாக்கல் செய்து இந்த மாமன்றத்தில் நான் ஆற்றிய உரையிலே, ஐந்து முக்கிய அம்சங்களை முன்வைத்தேன்.

அவை மக்களுடைய பாதுகாப்பு தொடர்புடையவை - மக்களுக்கு காவல்துறை மீது தனி நம்பிக்கையை ஏற்படுத்த அறிவிக்கப்பட்டவை. அந்த ஐந்து அம்சங்கள் என்னவென்றால்,

- தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும்.
- சட்டம்-ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதை உறுதிசெய்வதற்கு, குற்றங்களைத் தடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கும்.
- காவல் துறைக்கும் மக்களுக்கும் இடையிலான நல்லுறவே காவல் பணியில் இன்றியமையாத குறிக்கோள் என்பதை முன்னிறுத்தும்.
- காவலர் குறைதீர்க்கும் செயல்முறைகள் வலுப்படுத்தப்படும்.
- குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், இணையவழிக் குற்றங்கள் புலன் விசாரணையில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

இந்த அடிப்படை அம்சங்களைக் கடந்த ஓராண்டில் மிக நேர்த்தியாக கடைப்பிடித்து, சட்டம்-ஒழுங்கை இன்றைக்கு மிகச் சிறப்பாக நிலைநாட்டி வருகிறது இந்த ஆட்சி என்பதை நான் மகிழ்ச்சியோடு, பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசினுடைய நோக்கம் குற்றங்களைத் தடுப்பது. அந்த நடவடிக்கை ஒன்றே, மக்களுக்குக்

காவல்துறை மீது நம்பிக்கையைப் பெற்றுத்தரும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருப்பவன் நான்.

அதனால்தான் இன்றைக்கு இந்த ஓராண்டு காலத்தில் மக்களுக்குக் காவல்துறை மீதான நம்பிக்கையை மீட்டெடுத்திருக்கிறோம். ‘இது நம்ம போலீஸ்’ என்ற உணர்வை, பட்டி தொட்டிகளில் உள்ள மக்களிடம் உருவாக்கியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) ‘காவல்துறை நமது நண்பன்’ என்ற உணர்வை ஒவ்வொருவரிடமும் ஊட்டியிருக்கிறோம். மக்களுக்கும், காவல் துறைக்கும் நல்ல நட்பு இருப்பதால், குற்றங்கள் முன்கூட்டியே தடுக்கப்பட்டுள்ளன. அதனை மீறிக் குற்றங்கள் நடந்தாலும், அதற்குக் காரணமானவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சட்டம் - ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்ட பிறகு, அதைச் சமாளிப்பதைவிட முன்பே அப்படியொரு பிரச்சினை ஏற்படாமல் தடுப்பதே காவல் துறையினுடைய சிறந்த பணி என நம்புபவன் நான். அதனால்தான் குற்றங்களைத் தடுக்க முன்னுரிமை என்று அறிவித்து, அதைச் செயல்படுத்தி இருக்கிறோம். தொடர்ச்சியான ஆய்வுக் கூட்டங்கள் மூலமாகத்தான் குற்றங்களைத் தடுக்க முடியும்.

அந்த வகையில், 761 ஆய்வுக் கூட்டங்களை எஸ்.பி. - க்கள் மாவட்ட அளவில் நடத்தி, இதுகுறித்த ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். சரக அளவிலே 470 கூட்டங்கள் நடத்தி டி.ஐ.ஜி. - க்கள் இதுகுறித்த ஆலோசனைகளை அளித்துள்ளார்கள். மாநகரங்களில் 60 கூட்டங்களைக் காவல் துறை ஆணையர்களும், மண்டல அளவில் 134 ஆய்வுக் கூட்டங்களை ஐ.ஜி. - க்களும், மாநில அளவில் டி.ஜி.பி. உள்ளிட்ட உயரதிகாரிகளும் இதுபோன்ற ஆய்வு

கூட்டங்களை நடத்தி, “குற்றத் தடுப்பு” முன்னுரிமை குறித்து அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். இத்துறையின் அமைச்சர் என்ற முறையில்நான் காவல் துறை உயரதிகாரிகளைக் கடந்த 6-5-2022 அன்று அழைத்து பேசி ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.

மார்ச் 10 முதல் 12 வரை என் தலைமையிலே நடைபெற்ற மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதுகுறித்த ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன். அந்தக் கூட்டத்தில் திறந்த மனதோடு அதிகாரிகள் பங்கெடுத்துப் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதனை மனதில் வைத்துப் பல்வேறு திட்டங்களை அரசும் தீட்டி உள்ளது. “குற்றங்களைத் தடுப்போம் - தவிர்ப்போம்!” என்பதே இந்த அரசின் முழக்கமாக அமைந்திருக்கிறது.

தொழிற்சாலைப் பகுதிகளில் குற்றங்களைத் தடுக்கத் தனி போலீஸ் படை உருவாக்கப்பட்டது. 3 ஆயிரத்து 632 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டு, அவர்கள் “முழுக் காலத்திற்கு” முன்பே வெளியில் செல்வது பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 483 பேர் முழுக் காலமும் அனுபவிக்காமல், மிக விரைவிலேயே வெளியே வந்த அவல நிலை அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது. ஆனால், அந்த நிலை மாற்றப்பட்டு அப்படி வெளிவரும் எண்ணிக்கையையும் இந்த அரசு குறைத்திருக்கிறது. குற்றத் தடுப்பிற்கு இது ஒரு வகை. இப்படி அரசு எடுத்த நடவடிக்கைகள் மூலமாக இந்த “Preventive Policing“ முன்னுரிமையால், இந்த அரசு பொறுப்பேற்ற ஓராண்டுக் காலத்தில் திருட்டு வழக்குகளில், 53 விழுக்காடு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 144 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 43 விழுக்காடு சொத்துகள்

மீட்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) உளவுத் துறை, மாவட்டத் தனிப் பிரிவு, மாநகர நுண்ணறிவுப் பிரிவு, உள்ளூர் காவல் துறையினர் அளித்த முன்னெச்சரிக்கை தகவலின் அடிப்படையில், கடந்த ஓராண்டில் 268 கொலைகள் நடைபெறாமல் காவல் துறையினர் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவரை நடைபெற்ற 185-க்கும் மேற்பட்ட முக்கிய விழாக்களில் பங்கேற்ற 1 கோடியே 8 இலட்சம் பேரின் பாதுகாப்பினை இந்த அரசு உறுதிசெய்து, அவர்கள் திருவிழாக்களைக் கண்டு களித்துவிட்டு பாதுகாப்பாக வீடு திரும்ப வித்திடப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு சில முக்கிய நிகழ்வுகளை இங்கே சுட்டிக்காட்ட வேண்டுமென்றால், மருதுபாண்டியர் ஜெயந்தி விழா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் குரு பூஜை, இமானுவேல் சேகரன் நினைவு தினம், விநாயகர் சதுர்த்தி விழா, கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள், ரம்ஜான் போன்ற நிகழ்வுகளின்போது இந்த ஆட்சி மிகச் சிறப்பாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, சமூக நல்லிணக்கத்தை, சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக உள்ளாட்சித் தேர்தல் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் போன்றவற்றை அமைதியாக நடத்தி, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய பாராட்டைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் அவர்கள் உள்ளிட்ட 12 பேர் பயணித்த ஹெலிகாப்டர் விபத்துக்குள்ளான வேதனைக்குரிய நிகழ்வு நடைபெற்றது. அந்தத் துயரமான நிகழ்வில் நான் உட்பட தமிழகம் முன்னணியில்

நின்று களப்பணியாற்றியதை நம் நாடே போற்றியது. நம் இராணுவ அதிகாரிகளே பாராட்டியிருக்கிறார்கள்.

திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஃபாக்ஸ்கான் டெக்னாலஜி தொழிற்சாலை தொடர்பாக ஆயிரக்கணக்கான பெண் தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்திற்கு அமைதி வழியில் ஆக்கப்பூர்வமான தீர்வு கண்டதை அண்டை மாநிலங்களில் தொழிற்சாலை வைத்திருப்போர்கூட பாராட்டினார்கள்.

இப்படி பல்வேறு முக்கிய நிகழ்வுகளில் தமிழ்நாடு காவல் துறை இந்த அரசின்கீழ், எனது தலைமையின்கீழ் மிகவும் திறமையாகச் செயல்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கொடுங்குற்றங்கள் தொடர்பாகவும் கூலிப்படைகள் விஷயத்திலும் ஈவு இரக்கமின்றி இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அ.தி.மு.க. ஆட்சியில் மே 2020 முதல் ஏப்ரல் 2021 வரை நடைபெற்ற கொலைகள் 1,695. கடந்த ஓராண்டு காலத்தில் நிகழ்ந்துள்ள கொலைகள் 1,558. கொள்ளை (Dacoity) அ.தி.மு.க. ஆட்சியில் 146. தற்போது அது 103 ஆகக் குறைந்துள்ளது. கூலிப்படைகளின் அட்டகாசத்திற்கு இந்த அரசு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் அ.தி.மு.க. ஆட்சியில் மே 2020 முதல் ஏப்ரல் 2021 வரை 30 கூலிப்படைக் கொலைகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் இந்த ஆட்சியில் அது 18-ஆகக் குறைக்கப்பட்டு கூலிப்படைகளின் ஆதிக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி இரு ஆண்டுகளில் 16 போலீஸ் துப்பாக்கிச்சூடு நடைபெற்றுள்ளது. அதில் ஒன்றுதான் ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு சம்பவம்.

ஆனால், தி.மு.க. ஆட்சியில் அந்த நிலை ஏற்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் எந்தச் சூழலிலும் துப்பாக்கிச்சூடு என்பது ஏற்படவே இல்லை.

காவல் நிலையங்களில் ஏற்படக்கூடிய மரணங்களைப் பொறுத்தவரையில் சில விளக்கங்களை திறந்த மனதோடு இந்த அவையில் நான் தெரிவிக்க விரும்புகிறேன். என்னிடம் உள்ள புள்ளிவிவரங்களின்படி, 2017 ஆம் ஆண்டு எட்டு பேரும், 2018 ஆம் ஆண்டு 12 பேரும், 2019 ஆம் ஆண்டு 11 பேரும், 2020 ஆம் ஆண்டு ஆறு பேரும், 2021 ஆம் ஆண்டு ஐந்து பேரும், 2022 ஆம் ஆண்டு இதுவரை நான்கு பேரும் உயிரிழந்திருக்கிறார்கள்.

இந்த மரணங்கள் எந்த ஆட்சியில் நடந்திருந்தாலும் அதை நியாயப்படுத்தக் கூடாது, நியாயப்படுத்தவும் முடியாது. காவல்துறையினர் இதுபோன்ற சம்பவங்களில் விழிப்புடன் இருக்குமாறும், விசாரணைக்காகக் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்படக்கூடிய நபர்களைத் தேவையின்றி மனரீதியாகவோ, உடல்ரீதியாகவோ துன்புறுத்தக் கூடாது என்றும், வழக்குகளில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் எதிரிகளைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுவந்து விசாரிக்கும்போது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கைது செய்யப்பட்டவர்களைக் கையாளும்போது தனிப்பட்ட வெறுப்புணர்ச்சியைக் காட்டக் கூடாது. பெரும்பாலான குற்றங்கள் சந்தர்ப்ப சூழலால் செய்யப்படுவதாக இருக்கிற காரணத்தால், குற்றவாளிகளைத் திருத்தும் முயற்சியைக் காவல்துறையினர் செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் கொடிய குற்றம் செய்தவர்கள், எளிதாக, பிணையில் வெளிவர இயலாத வகையில் பல்வேறு சட்டப்பிரிவுகளில் கைது செய்ய வேண்டும்.

குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் அவர்களை வைக்க வேண்டும். கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்ற வழிகாட்டுதலின்படி உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும். வழக்குகளில் தேவையற்ற காலதாமதம் கூடாது. குறிப்பிட்ட காலத்திற்குள் புலன்விசாரணை முடிக்கப்பட வேண்டும் என்ற உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறோம்.

இத்துடன், காவல் துறையினருக்கு உணர்திறன் பயிற்சி (Sensitization Training) மூலம் காவல் நிலையத்தில் குற்றவாளிகளைக் கையாளுவது குறித்தும், அவர்களிடம் அறிவியல் அடிப்படையில் புலன்விசாரணை மேற்கொள்வது குறித்தும் அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. இதன்பொருட்டு, அவ்வப்போது இப்பயிற்சிகளைக் காவல் துறையினருக்கு அளிக்க திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவரைக் கைது செய்வது குறித்தும், அவரை விசாரணை செய்வது குறித்தும் காவல் துறையினருக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தபோதிலும், காலமாற்றத்திற்கு ஏற்றவாறு இத்திறன்களை மேம்படுத்தக்கூடிய வகையில், போலீஸ் கான்ஸ்டபில்களுக்கும், அதிகாரிகளுக்கும் காவல் உயர் பயிற்சியகங்களிலும், காவல் பயிற்சிப் பள்ளிகளிலும் கூடுதலாக உரிய விழிப்புணர்வும், போதிய பணியிடைப் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும் என்பதை நான் மறுக்கவில்லை.

இப்போது நிகழ்ந்துள்ள லாக்-அப் மரணங்களில் எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவீர்கள். இந்த அரசு எப்போதும் எதையும் மறைக்க முயலுவதில்லை. எங்களைப் பொறுத்தவரையில் லாக்-அப் குற்றங்கள் இனி நடக்காமல் இருப்பதற்கான உறுதியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான்

தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க. ஆட்சியில், குற்றங்கள் குறைந்துள்ளன என்பதற்கு இன்னொரு முக்கிய ஆதாரமாக ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஓராண்டில் 12 இலட்சத்து 74 ஆயிரத்து 36 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டன. ஆனால் தி.மு.க. ஆட்சியில் அது பெருமளவு குறைந்து 8 இலட்சத்து 66 ஆயிரத்து 653 முதல் தகவல் அறிக்கைகள் மட்டுமே பதிவாகியிருக்கின்றன என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியில் குற்றங்கள் குறைந்திருக்கிறது அல்லது முன்கூட்டியே தடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இக்குற்றங்களில் ஈடுபடுவோர்மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழும், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் போக்சோ சட்டத்தின்கீழும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, வழக்குகளை விரைந்து நடத்தி முடித்து, நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத்தர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் போக்சோ சட்டத்தின்கீழ் கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் முதல் இவ்வாண்டு (2022) மார்ச் மாதம் வரை 4,496 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 3,441 வழக்குகளில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பெண்களுக்கெதிரான குற்றங்களில் மானபங்கம் தொடர்பாக 1,053 வழக்குகளும், பெண் கடத்தல் தொடர்பாக 547 வழக்குகளும், பாலியல் பலாத்காரம் தொடர்பாக 416 வழக்குகளும், போக்சோ பாலியல் பலாத்காரம் தொடர்பாக 3,350 வழக்குகளும் தாக்கலாகியிருக்கின்றன. பெண்களுக்கெதிரான குற்றங்கள், குறிப்பாக வரதட்சணை சம்பந்தமான கொலைகள், பாலியல் கொடுமைகள், மானபங்க வழக்குகள் போன்றவை தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையுடன் முன்வந்து புகார்களை அளித்து வருகிறார்கள்.

தி.மு.க. ஆட்சி பெண்களுக்கெதிரான குற்றங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையில், பாதிக்கப்பட்ட பெண்கள், மாணவிகள் அச்சமின்றிப் புகார்களை அளித்து வருகிறார்கள். கிராமங்களில் விழிப்புணர்வு கமிட்டிகள்மூலம் இதுபோன்ற குற்றங்கள் நிகழாமல் முன்கூட்டியே தகவல் அறிந்து தடுக்கப்படுகிறது. போக்சோ சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த ஒவ்வொரு வகுப்பறையிலும் 1098 என்ற சிறார் உதவி எண் ஒட்டப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தைகள் மீதான குற்றத் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த ஒலி, ஒளி கட்டமைப்போடு கூடிய இரண்டு பல்நோக்குப் பயன்பாட்டு விழிப்புணர்வு வாகனங்கள் தொடங்கி வைக்கப்பட்டன.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு உதவிட போக்சோ சட்டத்தின்கீழ் நிதியும் உருவாக்கப்பட்டது. இதன் தாக்கம், குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளதில் எதிரொலிக்கிறது. குழந்தைகள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமை குற்றங்களைப் பொறுத்தமட்டில், போக்சோ சட்டத்தின்கீழ் 4,496 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்வது

முக்கியமல்ல; குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதுதான் மிக முக்கியம். அந்த வகையில் பார்த்தால், பதிவி செய்யப்பட்ட வழக்குகளில், அதிகமான எண்ணிக்கையில், அதாவது, 3,441 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு இன்றைக்கு நீதிமன்ற விசாரணைக்கு வந்துவிட்டது. பாலியல் குற்றங்களில் எடுக்கப்படும் விரைவான நடவடிக்கைக்கு ஒரு எடுத்துக்காட்டை மட்டும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேலூர் மாவட்டம், காட்பாடி அருகில் பெண் மருத்துவர் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட விவரம் வேறு ஒரு வழக்கு விசாரணையின்போது தெரியவந்தது. அதைத் தொடர்ந்து பீகாரில் உள்ள அந்தப் பெண்ணிடம் 22-3-2022 அன்று வேலூர் வடக்கு காவல் நிலையத்தில் மின்னஞ்சல் வாயிலாக புகார் பெறப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அன்றையதினமே குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட அவர்கள் 15-4-2022 அன்று குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார்கள். குற்றவாளிகள் மீது 23-4-2022 அன்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 4-5-2022 அன்று வழக்கு விசாரணையே துவங்கிவிட்டது. பாலியல் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு, 32 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, இந்த வழக்கில் தமிழ்நாடு காவல்துறை சாதனை படைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் எனது தலைமையிலான அரசின்கீழ் உள்ள காவல்துறை, (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களான மாவா, குட்கா, ஹன்ஸ் போன்ற பொருட்களைப் பதுக்கி வைத்து விநியோகம் செய்பவர்கள், கடைகளில் விற்பனை

செய்பவர்கள் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பொருட்களை விற்பவர்கள், கடத்துபவர்கள் ஆகியோரைக் கண்காணித்து திடீர் சோதனைகளை நடத்தி, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, தொடர்புடையோர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் விற்பனை மற்றும் பயன்பாடு காலங்காலமாக இருந்து வருகின்றபோதிலும், கடந்த சில ஆண்டுகளில் இவற்றைப் பயன்படுத்துவது அதிகரித்து வருவதை அறிந்த இந்த அரசு, சட்டத்திற்குப் புறம்பாகக் குற்றங்களில் ஈடுபடுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதன் பேரில், கஞ்சா மற்றும் குட்கா உள்ளிட்டவை கடந்த ஆண்டுகளைவிட, இந்த ஓராண்டு காலத்தில் அதிகளவு பறிமுதல் செய்யப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கஞ்சா பயிரைப் பயிரிடுவது குறித்து, குறிப்பாக அண்டை மாநிலங்களில் இது அதிகளவு பயிரிடப்படுவதாகவும், தமிழ்நாட்டில் சில மலைப்பிரதேசங்களில் பயிரிடப்படுவதாகவும் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், அம்மாநிலக் காவல் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பயிர்களை அழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்குற்றத்தில் ஈடுபடுவோர்மீது தடுப்புக்காவல் சட்டப்பிரிவுகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அக்குற்றவாளிகள் மீண்டும் கஞ்சா பயிரிடுதல், கடத்துதல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவதைத் தவிர்க்கக்கூடிய வகையில், அவர்களுக்கு மாற்றுத் தொழிலில் ஈடுபட உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், கஞ்சா மற்றும் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதால், சமூகத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் எதிர்கால சந்ததியினருக்கு நேரக்கூடிய பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இந்தப் போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுவோருக்கு போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதுதவிர, இக்குற்றங்களில் ஈடுபடுவோர், அவர்களது கூட்டாளிகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயரில் இருக்கக்கூடிய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும், போதைப் பொருள் தடுப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 2021 ஆம் ஆண்டு மே முதல் 2022 ஆம் ஆண்டு மார்ச் வரை, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக, 7,931 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 10,837 நபர்கள் கைது செய்யப்பட்டதோடு, அவர்களுள் 648 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

அவர்களிடமிருந்து, ரூபாய் 31 கோடியே 76 இலட்சத்து 89 ஆயிரத்து 140 மதிப்புள்ள 43 ஆயிரத்து 228 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இதேபோன்று, குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பாக, 35 ஆயிரத்து 38 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 36 ஆயிரத்து 293 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களுள் 720 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களிடமிருந்து, 66 கோடியே 67 இலட்சத்து 56 ஆயிரத்து 249 ரூபாய் மதிப்புள்ள 3 லட்சத்து 84 ஆயிரத்து 972 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

மாநிலத்தில் முக்கிய நகரங்களில், குறிப்பாகப் பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் இருக்கக்கூடிய கடைகளில் சரக காவல்துறையினர் அடிக்கடி சோதனைகள் மேற்கொண்டு, தடை செய்யப்பட்ட கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்பவர்களைக் கண்டறிந்து அவர்கள் மீது வழக்குகள் பதிவுசெய்து கடும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறார்கள்.

இத்துறைக்குப் பொறுப்பேற்றதும் கூறிய முதல் அறிவுரை - “பள்ளி, கல்லூரி வளாகங்களில் குட்கா, கஞ்சா விற்பனைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வையுங்கள் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் தெருவுக்குத் தெரு குட்கா, கஞ்சா என்ற நிலையை அறவே ஒழிக்க வேண்டும்!” என்பதுதான். அதன் அடிப்படையில் காவல்துறை செயல்பட்டு வருகிறது. கஞ்சா விற்பனை செய்வோரின் - சொத்துக்களைப் பறிமுதல் செய்யவும் நான் உத்தரவிட்டேன். குறிப்பிட்ட சில வழக்குகளை உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், தேனி மாவட்டம் ஓடைப்பட்டிகாவல் நிலைய எல்லையில் கஞ்சா விற்ற பூபாலன் உள்ளிட்ட 8 பேரினுடைய வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், ஆஸ்டின்பட்டி காவல் நிலைய எல்லையில் கஞ்சா விற்ற ஜெயக்குமார் உள்ளிட்ட 7 பேரின் நிலத்துடன் கூடிய 4 வீடுகள், 2 இரு சக்கர வாகனங்கள், 29 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி காவல் நிலைய எல்லை கஞ்சா வழக்கில் நவீன் குமார் உள்ளிட்ட 5 பேரின் நிலத்துடன் கூடிய 6 வீடுகள், 60 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. “ஒழிப்பு” ஒருபுறம், “விழிப்புணர்வு இன்னொரு புறம்” என்று

குட்கா, கஞ்சா பற்றிய நடவடிக்கையை இந்த அரசு தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை ஒழிக்க 256 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. உயர்கல்வித் துறையில் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் "போதைத் தடுப்பு கிளப்" (Anti-Drug Clubs) அமைக்க ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்றதும் சட்டமன்றத்தில் அளித்த வாக்குறுதியின்படி, கல்வி நிறுவனங்கள் இருக்கக்கூடிய 200 மீட்டர் தொலைவிற்குள் போதைப் பொருட்கள் விற்பவர்களுக்கு 3 வருடம் முதல் 10 வருடம் வரை சிறைத்தண்டனை விதிக்கவும், ஒரு இலட்சம் முதல் 2 இலட்சம் வரை அபராதம் விதிக்கவும், போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடைச் சட்டம், 1985-ல் உரிய திருத்தங்கள் செய்யத் தேவையான கருத்துருக்கள் ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதன்மீது ஒப்புதல் பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த அரசு குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை ஒழிக்க இன்னும் கடுமையான நடவடிக்கைகளை வரும் நாட்களில் எடுக்கும் என்ற உறுதியை இந்த அவைக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சாலைப் பாதுகாப்பில் இந்த அரசு மிக முக்கியக் கவனம் செலுத்தி வருகிறது. "நம்மைக் காக்கும் 48" என்ற திட்டம் - உயிர்காக்கும் திட்டம். அந்த திட்டத்தின் மூலமாக சாலை விபத்துகளைக் குறைக்க காவல்துறையின் சார்பில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் விளைவாக, விபத்து மரணங்கள் இந்த ஆட்சியில் குறைந்துள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் மரணத்தை ஏற்படுத்தும் விபத்துகள் 15,290 - ஆக இருந்துள்ளது. தற்போது அது 14,203 - ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் 15,967 - ஆக இருந்த விபத்து மரணங்கள், தற்போது 14,845 - ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதெல்லாம் உண்மையான தகவல்கள்! ஏதோ சென்ற ஆட்சியில் ‘‘விபத்துக்களை’’ ‘‘விபத்து மரணங்களை’’ குறைக்க செய்யப்பட்ட புள்ளிவிவர மோசடிகள் போல் அல்ல! என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை மக்களுக்காகச் செயல்படும்போது, இந்த அரசும் இரவு பகல் பாராமல் பணியாற்றக்கூடிய காவல்துறையினருக்காகச் செயல்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. அதை மனதில் வைத்துதான் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த நிதிநிலை அறிக்கையின்போது காவல்துறைக்கு அறிவிக்கப்பட்ட 44 அறிவுப்புகளில் 39 - க்கு அரசாணை வெளியிடப்பட்டு விட்டது.

நான் துவக்கத்திலேயே சொன்னதுபோல் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி சி.டி.செல்வம் அவர்கள் தலைமையில் காவலர்களுக்கு நலத்திட்டங்கள் உருவாக்க புதிய காவல் ஆணையம் அமைக்கப்பட்டது. இரண்டாம்நிலைக் காவலர்கள், தீயணைப்புக் காவலர்கள், சிறைக் காவலர்கள் உள்ளிட்ட பணிகளுக்கு 11,150 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

காவலர்கள் தங்கள் உடல்நலனைப் பேணிக் காத்திடவும், தங்கள் குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடவும் இரண்டாம்நிலைக் காவலர் முதல் தலைமைக் காவலர்கள் வரையிலான ஆளிநர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஒய்வு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டு அது அரசாணையாக்கப்பட்டு - கடந்த ஆறு மாதங்களில் 63 ஆயிரத்து 77 பேர் வார ஓய்வினைப் பெற்று பயன் அடைந்துள்ளார்கள்.

சென்னைப் பெருநகர ஆயுதப்படைக் காவல் ஆளிநர்களின் நலன் கருதி சென்னை பெருநகரக் காவலில் செயல்படும் CLAPP செயலி மூலம், இதுவரை 2,566 காவல் ஆளிநர்கள் தற்செயல் விடுப்பும், 2,188 காவல் ஆளிநர்கள் வாராந்திர விடுப்பும், 494 காவல் ஆளிநர்கள் மருத்துவ விடுப்பும், 252 காவல் ஆளிநர்கள் ஈட்டிய விடுப்பும் என, மொத்தம் 5,590 காவல் ஆளிநர்கள் இச்செயலி மூலம் விடுப்பு பெற்று பயன்பெற்றுள்ளார்கள்.

தமிழக காவல்துறையினரின் மரபைப் போற்றும் வகையில் 6 கோடியே 47 லட்ச ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது. காவலர் முதல் துணைக் கண்காணிப்பாளர் வரை வழங்கப்படும் குடியிருப்பின் இட அளவு 100 சதுர அடியிலிருந்து 220 சதுர அடியாக உயர்த்தி வழங்கப்பட்டது. காவலர்களின் வாரிசுகள் 800 பேருக்கு 2020-ஆம் ஆண்டு வரையிலான கருணை அடிப்படையில் வேலை வழங்கப்பட்டது.

தலைமைச் செயலகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது இறந்த பெண் தலைமைக் காவலர் கவிதா குடும்பத்திற்கு 25 லட்சம் ரூபாய் நிதியும், விபத்தில் காயமடைந்த காவலர் முருகன், தீயணைப்புப் படை வீரர் செந்தில்குமார் ஆகியோருக்கு தலா 5 லட்சம் ரூபாயும் வழங்க உத்தரவிடப்பட்டது. பணியில் இருந்தபோது இறந்த நவல்பட்டு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பூமிநாதனுக்கு 1 கோடி ரூபாய் நிதியுதவியும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசுப் பணியும் வழங்க உத்தரவிடப்பட்டது.

இந்த ஓராண்டில் குற்றங்களை நடைபெறவிடாமல் அரசு தடுத்திருக்கிறது. திருவிழாக்களில் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்திருக்கிறது. காவல்துறைக்கும் - மக்களுக்கும் ஒரு நல்லுறவை ஏற்படுத்தி, தமிழ்நாடு காவல்துறை மீது மக்களுக்கு இப்போது மிகப்பெரிய நம்பிக்கை வந்திருக்கிறது. கூலிப்படையினர் எங்கோ ஓடி மறைந்தனர் - ஒழிந்தனர் என்ற அளவிற்கு மாநிலத்தை விட்டு விரட்டப்பட்டுள்ளார்கள்.

சட்டத்தின் ஆட்சி நிலைநிறுத்தப்பட்டு - எவ்வித பாரபட்சமின்றி காவல்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

எவ்வித அரசியல் குறுக்கீடுகளும் இல்லாமல் காவல்துறை சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு நிலைநாட்டப்பட்டுள்ளது. எத்தனை சக்திகள் முயன்றாலும் சாதி மத மோதல் இன்றி - சமூக நல்லிணக்கத் தோட்டமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது. மத மோதல்களை ஏற்படுத்துவோர் - யாராக இருந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனிமேலும் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்படும்.

மத துவேஷங்களுக்கு தமிழ் மண்ணில் இடமளிக்க முடியாது. அப்படி முயலுவோர் சட்டத்தின் தண்டனையை நிச்சயம் அனுபவிக்கக்கூடிய சூழலை இந்த அரசு நிச்சயம் உருவாக்கும். வலைத்தள யுகத்தின் ஆபத்துக்களை அறிந்து இந்த அரசு அவற்றைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுவும் தொடரும்.

நான் வெளியூர் பயணங்களுக்கு செல்லும்போது காவல் நிலையங்களிலும் தீயணைப்பு நிலையங்களிலும் திடீர் ஆய்வு நடத்துவதை வழக்கமாக வைத்திருக்கிறேன்.

அப்படி ஆய்வு நடத்தும்போது மக்களுக்கான சேவைகள் என்ன என்பது குறித்தும், காவலர்களுக்கான தேவைகள் குறித்தும் நான் கேட்டறிந்து அதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுகிறேன். இந்த அரசைப் பொறுத்தவரை மக்களின் நலனைக் காவல்துறையினர் பாதுகாக்கிறார்கள். ஆகவே, காவலர்களின் நலனை இந்த அரசு பாதுகாக்கும் என்று இந்த மாமன்றத்தில் உறுதியோடு நான் பதிவுசெய்கிறேன். விரைவில் புதிய காவலர் ஆணையத்தின் பரிந்துரைகள் கிடைக்கும். அப்படி கிடைத்ததற்கு பிறகு, அதன் மூலம் காவல்துறையினருக்குப் பல நன்மைகளும் கிடைக்கும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நேற்றைய தினம் உள், மதுவிலக்கு, மற்றும் ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியங்களில் பங்கேற்று பேசியிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.சேலம் ராஜேந்திரன் மற்றும் திரு. வி.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் காவல்துறையின் நடவடிக்கைகளையும் அரசின் சாதனைகளையும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன்.

அதைத் தொடர்ந்து பேசிய, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் சி.சி.டி.வி. பராமரிப்பு குறித்து ஒன்றை சொன்னார். தனி நிதி உருவாக்கவேண்டும் என்றார்.

சென்னையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி - க்களை பராமரிக்க ஏற்கனவே அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலத்தின் பிற பகுதியில் உள்ள சிசிடிவி - க்களைப் பராமரிக்கவும் வருங்காலங்களில் நிச்சயமாக போதுமான நிதி ஒதுக்கப்படும்.

அதேபோல், நம்முடைய மதிப்பிற்குரிய மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார். கடவுச் சீட்டுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு வரவேண்டும் என்ற நிலையை மாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார். அதேபோல், கல்பாக்கம் அணு உலைக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது போடப்பட்டு இருக்கக்கூடிய வழக்கினை ரத்து செய்ய கோரிக்கை வைத்தார்.

தற்போது, கையடக்கக் கணினி மூலம் காவலர்கள் அவரது வீட்டிற்கே சென்று விபரங்களைப் பெறும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சில சமயங்களில் வீட்டில் ஆட்கள் இல்லாதபோது அவர்களை காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளச் செய்யும் நிலை எற்படுகிறது. அதுதான் உண்மை. வரும் காலங்களில் கடவுச்சீட்டு விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு வர

வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை கட்டாயம் ஏற்படுத்தப்படும். கூடங்குளம் அணு உலைக்கு எதிராக போராடியவர்கள் மீது வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

அதுபோலவே கல்பாக்கம் அணு உலைக்கு எதிராக போராடியவர்கள் மீது போடப்பட்டு இருக்கக்கூடிய வழக்குகளை திரும்பப் பெறக்கூடிய சூழ்நிலையை அரசு தலைமை வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்று இக்கோரிக்கை நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

அதேபோல் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன் அவர்கள் கூடுதல் காவலர் நியமனங்களைப் பற்றி இங்கே பேசினார். விரைவில், 3 ஆயிரம் புதிய காவலர்கள் தேர்வு செய்யப்பட உள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். பரம்வீர் சிங் சைனி வழக்கை அவர் சுட்டிக்காட்டியது போல், அனைத்து காவல் நிலையங்களிலும் சிசிடிவி கேமிரா வைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார், "கோயில் திருவிழாக்களில் கரகாட்ட நிகழ்ச்சிகள், கச்சேரிகள், சினிமா மெல்லிசைப் பாடல்களை பாடுவது போன்றவை முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளன" என்று குறிப்பிட்டார். இது தொடர்பாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஆபாச நடனங்களைத் தடுக்க உயர்நீதிமன்றம் சில வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்திருக்கிறது. அதைத்தான் அரசு கடைப்பிடித்து வருகிறதே தவிர கரகாட்ட நிகழ்ச்சிகள், கச்சேரிகள், சினிமா மெல்லிசை பாடல்களை பாடுவதற்கு காவல்துறை எந்த தடையும் விதிக்கவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற கட்சித் தலைவர் கோ.க. மணி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார், "அரசுப் பணியில் பெண்களுக்கு 40 விழுக்காடு இட ஒதுக்கீடு

அளிக்கப்பட்டிருந்தாலும் இப்போது வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் பெண்களுக்கு குறைவான இடமே கொடுக்கப்பட்டுள்ளது'' என்று சுட்டிக்காட்டினார். ''காவல்துறை நியமனங்களுக்கான தேர்வுகளை பொறுத்தவரைக்கும் பெண்களுக்கான இடஒதுக்கீடு நிச்சயமாக உறுதி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து அவர் பேசுகிறபோது இன்னொன்றையும் சொன்னார், போதைப் பழக்கத்திற்கு இளைஞர்கள் அடிமையாவதை தடுக்கவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்க பரிந்துரைத்தார். அந்த அடிப்படையில், சமூகநலத்துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு காவல்துறையில் உள்ள போதைத் தடுப்புப்பிரிவு ஆகியவை இணைந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஓர் ஆய்வு நடத்தி பாதிக்கப்பட்ட இளைஞர்களின் மறுவாழ்விற்கும் மீண்டும் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதை தடுக்கவும், தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற கட்சியினுடைய தலைவர் கு.செல்வப்பெருந்தகை அவர்கள் காவலர் மனநல பயிற்சி குறித்து பேசினார்.

சென்ற நிதி நிலை அறிக்கையிலேயே காவல்துறையினரின் மன அழுத்தத்தை போக்க பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ''அண்ணா நிர்வாகப் பயிற்சி கல்லூரி'' மூலம் பயிற்சிகள் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிஞ்சான்குளத்தில் பிரச்சனைக்குரிய 25 சென்ட் நிலத்தைப் பொறுத்தமட்டில் அந்த வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

அரசு இப்பிரச்சனையை கவனமாக கையாண்டு வருகிறது. இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் முடிவெடுக்க மாவட்ட ஆட்சித்

தலைவர் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய அதிமுகவைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் பேசும்போது, பொள்ளாச்சியில் இருந்த பழங்கால காவலர் குடியிருப்பு இடிக்கப்பட்டுள்ளது குறித்து பேசினார். அது உண்மை தான். அதை கட்டித்தர வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். அதே இடத்தில் 266 புதிய காவலர் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசினார். ஏறக்குறைய இரண்டு மணிநேரத்திற்கும் மேல் பேசியிருக்கிறார். பாலியல் குற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களை நேற்றைய தினம் இங்கே பட்டியலிட்டார். ஆனால் அவற்றில் எல்லாம் காவல்துறை உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து வந்திருக்கிறது. இதே மன்றத்தில் அது குறித்த விவரங்கள் ஏற்கனவே கூறப்பட்டு இருக்கிறது.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டுகளை சொன்னாரே தவிர அதன் மீது உடனடியாக காவல்துறை எடுத்த நடவடிக்கையை சொல்லாமல் விட்டுவிட்டார். இந்த அரசைப் பொறுத்தவரை தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது.

இன்னொன்றையும் அவர் குறிப்பிட்டார். காவல்துறை மீது அச்ச உணர்வு போய் விட்டது என்று ஒரு கருத்தை சொன்னார். அது கடந்த 10 ஆண்டுகளில் இருந்த நிலைமை. நிச்சயமாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு அந்த நிலை இல்லை. உண்மையைச் சொல்லப் போனால் காவல்துறை கம்பீரமாக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் துறையாக மாறியிருக்கிறது.

“ஆப்பரேஷன் கஞ்சா வேட்டை என்று திமுக ஆட்சியில்தான் டிஜிபி அறிவித்தார்” என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

என்ன செய்வது! அப்படியொரு நிலைமையைத்தானே உங்களின் ஆட்சியில் விட்டுச் சென்றீர்கள்! அதைக் கட்டுப்படுத்தி ஒழித்து மாணவர்கள், இளைஞர்களைக் காப்பாற்றவே அந்த வேட்டை நடத்தப்பட்டு இருக்கிறது. இனியும் கூட நடத்தி அதிமுக ஆட்சி காலத்தில் வளர்த்து விடப்பட்ட போதைப் பொருள் கலாச்சாரத்திற்கு நிச்சயமாக நாங்கள் முற்றுப்புள்ளி வைப்போம்.

அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மீது உண்மைக்கு மாறான வழக்குகளும், அதிமுக தகவல் தொழில்நுட்பப் பிரிவைச் சார்ந்த நிர்வாகிகள் மீது தேவையில்லாமல் வழக்குகள் பதிவு செய்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார். அப்படி முடிவு செய்து நடவடிக்கை எடுத்திருந்தால் அதிமுகவின் தகவல் தொழில்நுட்பப் பிரிவினர் செய்யும் அவதூறு, அநாகரீகப் பிரச்சாரங்களுக்கு தினமும் ஒரு வழக்குப் போட வேண்டியதிருக்கும்.

திமுகவின் தகவல் தொழில்நுட்ப பிரிவினரின் மீது போட்ட உண்மைக்கு மாறான வழக்குகள் போல் நிச்சயமாக இப்போது அதிமுகவினர் மீது போடுவதில்லை. எனது ஆட்சியில் முழுக்க முழுக்க கருத்து சுதந்திரம் அளிக்கப்பட்டாலும் அது அநாகரீக எல்லையைத் தாண்டும்போது சில உண்மையான வழக்குகள்தான் போடப்பட்டுள்ளதே தவிர உண்மைக்கு மாறான வழக்குகள் ஒன்று கூட இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சமுதாயத்தின் நலனே முக்கியம் எனக் கருதி, தங்களது குடும்பங்களைப் பிரிந்து, இரவு பகல் பாராமல் - கண்துஞ்சாமல் பணியாற்றும் காவல் துறையினரின் அர்ப்பணிப்பு உணர்வு என்பது

உள்ளபடியே பாராட்டுக்குரியது. அனைவருக்குமான ‘திராவிட மாடல்’ வளர்ச்சியின் அடித்தளமாகச் சமூக நல்லிணக்கம் - சமூகநீதி - சமநீதி - சட்டநீதி ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காக்க காவல்துறை துணைபுரிய வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை மாநிலத்தின் அமைதியே முக்கியம். அமைதிமிகு தமிழகம்தான், வளமிகு தமிழகமாக மாற முடியும். எனது கட்டுப்பாட்டில் வரும் காவல்துறையில் பொறுப்போடு பணியாற்றும் தமிழக உள்துறைச் செயலாளர், காவல் தலைமை இயக்குநர், சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி - நுண்ணறிவு ஏடிஜிபி, காவல் துறை டிஜிபிக்கள் – ஏடிஜிபிக்கள், சென்னை மாநகர ஆணையர் உள்ளிட்ட காவல் ஆணையர்கள், மாவட்ட எஸ்.பிக்கள் - உள்ளிட்ட அனைத்து காவலர்களது முழு அர்ப்பணிப்பு உணர்வுதான் உள்துறையின் சீரான செயல்பாட்டுக்குக் காரணம். எனவே அவர்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றியையும் - பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வருங்காலங்களில் இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டும் - அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் - நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். உங்களது ஒவ்வொரு நொடியிலும் மக்களின் நல்வாழ்வு கலந்துள்ளது என்ற எண்ணத்தோடு நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஏப்ரல் 6-ஆம் நாள் அன்று தமிழ்நாடு சட்டமன்றம் கூடியது. இன்றுடன் இந்தக் கூட்டத் தொடர் முடிவடைய போகிறது. இந்த 22 அலுவல் நாட்களுக்கும் அவை நடவடிக்கைகள் குறித்து ஒரு வரியில் சொல்வதாக இருந்தால் ஆக்கபூர்வமாக இருந்தது என்பதை மனப்பூர்வமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகத்தின் அரங்கேற்ற மேடைதான் சட்டமன்றங்கள். நாம் ஜனநாயகத்தையும் - மக்களாட்சியையும் எப்படி மதிக்கிறோம் என்பதன்

விரிவடைந்த காட்சிகள்தான் இந்த அவையினுடைய நடவடிக்கைகள். அந்த வகையில் தமிழ்நாடு சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரானது ஜனநாயக நெறிமுறைகளின் படியும் - மக்களாட்சியின் மாண்பைக் காக்கும் வகையிலும் நடைபெற்றுள்ளது.

சொல்லாடலில் சூடும் சுவையும் இருக்கலாம். அதேநேரத்தில் நாகரிகமும் பண்பாடும் எப்போதும் நழுவிவிடக் கூடாது. அதை மறந்துவிடவும் கூடாது. அதை துறந்துவிடவும் கூடாது" என்றார் முத்தமிழறிஞர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அத்தகைய சொல்லாடல் அரங்கமாகத்தான் இந்த அரங்கம் இருந்தது. நாகரிகம் நடமாடியது. பண்பாடு தவழ்ந்தது. மோதிக் கொண்டோம் - சொற்களால்! வாதிட்டுக் கொண்டோம் - வார்த்தைகளால்!

இத்தகைய பண்பாட்டை எந்நாளும் நாம் காக்க வேண்டும் என்று இரண்டு பக்கம் இருப்பவர்களும் உறுதி எடுத்துக் கொள்வோம். இந்தளவுக்கு அவையானது ஆக்கப்பூர்வமாக நடைபெறக் காரணமாக அமைந்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் மனதார - உளமாரப் பாராட்டுகிறேன்! அவர் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியவர். இன்றைய தினம் - பேரவைத் தலைவராக மட்டுமல்ல – நமக்கெல்லாம் தலைமை ஆசிரியரைப் போல அவர் நடந்து கொண்டார்.

உருவத்தால் மட்டுமல்லாமல் உள்ளத்தாலும் உயர்ந்தவர் நமது பேரவைத் தலைவர் அவர்கள்! எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல ஆளும்கட்சி உறுப்பினர்களையும் அவர் வார்த்தைகளால் வழிநடத்தினார். அவருக்கு துணையாக நம்முடைய பேரவையினுடைய துணை சபாநாயகர் அவர்களும், அவர்களுக்கு துணையாக இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய சட்டப்பேரவைச் செயலாளர், அதேபோல சட்டப்பேரவையினுடைய அலுவலர்கள், அத்தனைபேருக்கும் என்னுடைய வாழ்த்துகளை நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஆளும்கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி

உறுப்பினர்களுக்கு அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்புத் தரப்பட்டதாகவே நான் கருதுகிறேன்.

அது உள்ளபடியே எனக்கு மனநிம்மதியை தருகிறது. இத்தகைய பரஸ்பர புரிதலோடு நாட்டு மக்களுக்கு நாம் நன்மையைச் செய்ய வேண்டும்.

அந்த வகையில் அரசுக்கு ஆக்கபூர்வமான பல்வேறு ஆலோசனைகளை வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கும் மனதார என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுங்கட்சியினுடைய கொறடா, எதிர்க்கட்சியினுடைய கொறடா, அதேபோல் நம்முடைய அவை முன்னவர் அத்தனைபேருக்கும் நான் நன்றி சொல்கிறேன். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்றக் கட்சித் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் நான் மனதார நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்பட்டு வருகிறது. தேர்தலுக்கு முன்பு இருந்ததை விட - மக்கள் ஆதரவை அதிகம் பெற்ற அரசாக வளர்ந்தும் வருகிறது. ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி என்பது தேர்தல் களத்தில்தான். சட்டமன்றத்துக்குள் மக்களுக்கான நன்மையைப் பற்றி நாம் சிந்திக்கும்போது நாம் அனைவரும் ஒரே கட்சிதான். அதுதான் மக்கள் கட்சி.

மக்களைக் காக்க - மக்களாட்சி மாண்பைக் காக்க மக்கள் இட்ட கட்டளையை மனதில் ஏந்தி எந்நாளும் உழைப்போம் என்பதைச் சொல்லி; அனைவர்க்கும் இதயமார்ந்த வாழ்த்துகளைச் சொல்லி விடைபெறுவதற்கு முன்னால் அறிவிப்புகள்...

**அந்த அறிவிப்புகளை முழுமையாக அல்ல, தலைப்புச் செய்திகளாக சுருக்கமாக நான் சொல்ல விரும்புகிறேன்.**

மொத்தமுள்ள 78 அறிவிப்புகளில், அதில் சில அறிவிப்புகளை நான் தலைப்புச் செய்தியாக இங்கே அறிவிக்கிறேன்.

1. பொதுமக்களிடையே போதைப் பொருட்கள் உபயோகம் மற்றும் புழக்கத்தைத் தடுக்கும் வகையில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவுடன் இணைக்கப்பட்டு "போதைப் பொருள் தடுப்பு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவாக" மறுசீரமைக்கப்படும்.

2. வெளிமாநில குற்றவாளிகள் மற்றும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவோரை கட்டுக்குள் கொண்டுவர ஒருங்கிணைந்த சுங்கச்சாவடி கண்காணிப்பு மையம் 9 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

3. மாநகரங்களில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் நடமாடும் ஆளில்லா விமான அலகு (Drone) காவல் படைப்பிரிவு விரிவுபடுத்தப்படும்.

4. சென்னை பெருநகரக் காவலில் 3 வழித்தடங்களில் போக்குவரத்து ஒழுங்குமுறைக் கண்காணிப்பு மண்டலம் (Traffic Regulation Observed Zone) அமைக்கப்படும்.

5. சென்னை அசோக் நகரில் செயல்பட்டு வரும் காவலர் பயிற்சிக் கல்லூரி (PTC) வண்டலூர் அருகே உள்ள உயர் காவல் பயிற்சியக வளாகத்திற்கு (Tamil Nadu Police Academy) மாற்றப்படும்.

6. காவல்துறையில் உள்ள தொழில்நுட்ப பிரிவில் பணியாற்றும் அனைத்து ஆளிநர்களுக்கும் இடர்ப்படி தொகை உயர்த்தி வழங்கப்படும்.

7. நுண்ணறிவுப் பிரிவில் மற்ற பிரிவினருக்கு வழங்கப்படுவதைப்போல திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவு (OCIU) ஆளிநர்களுக்கும் 5 விழுக்காடு சிறப்பு ஊதியம் அளிக்கப்படும்.

8. காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 30 இலட்சம் ரூபாயிலிருந்து 60 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

9. சென்னை பெருநகர காவல்துறையில் பணிபுரியும் பெண் ஆய்வாளர்கள், பெண் சார்பு ஆய்வாளர்கள் மற்றும் பெண் காவலர்களுக்கான பணி - வாழ்க்கை சமநிலை குறித்த பயிற்சி ‘‘ஆனந்தம்’’ என்கிற திட்டத்தின் மூலமாக வழங்கப்படும்.

10. தீயணைப்புத் துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கு காவல்துறை மருத்துவமனைகளில் மருத்துவம் பார்க்கும் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

11. சமூக ஊடகங்களைக் கண்காணிக்க மாநில காவல் தலைமையகத்தில், சமூக ஊடக மையம் (Social Media Centre) அமைக்கப்படும்.

12. தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை பணிகளை செவ்வனே மேற்கொள்ள மாநிலத்திலுள்ள 11 காவல் சரகங்களிலும் தலா ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி ஏற்படுத்தப்படும்.

13. மாநில கணினிசார் குற்றப்புலனாய்வு பிரிவிற்கு காவலர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு தலைமையிடக் கட்டடம் கட்டப்படும்.

14. திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் பாதுகாப்புப் பணிக்கு வரும் காவலர்கள் தங்குவதற்கு 12 கோடி ரூபாய் செலவில் பாளையம் (Barracks) கட்டப்படும்.

15. கடலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 203 புதிய காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

16. 4,631 காவலர் குடியிருப்புகளில் ஏற்பட்ட பழுதுபார்ப்புப் பணிகளுக்காக 20 கோடி ரூபாய் சிறப்பு நிதி நடப்பாண்டில் வழங்கப்படும்.

17. தொழில்நுட்ப நுண்ணறிவுப் பிரிவில் தரவுகளை சேமித்து வைக்கவும், விரிவாக்கம் செய்யவும் பயன்படும் வன்பொருள் வாங்கப்படும்.

18. சென்னைத் தலைமை ஆய்வகத்தில் ஆய்வுத் திறனை வலுப்படுத்த LC-MS எனும் அதிநவீன ஆய்வுக் கருவி வாங்கப்படும்.

19. காவல்துறைப் பணியாளர்களுக்கு இடர்ப்படி உயர்த்தி வழங்கப்பட்டதைப் போன்று தீயணைப்பு பணியாளர்களுக்கும் இடர்ப்படி உயர்த்தி வழங்கப்படும்.

20. தீயணைப்புப் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மிகைப்பணி ஊதியம் உயர்த்தி வழங்கப்படும்.

21. விழுப்புரம் மாவட்டம் – அன்னியூர், மதுரை மாவட்டம் – திருப்பரங்குன்றம், விருதுநகர் மாவட்டம் – ஏழாயிரம்பண்ணை, சென்னை புறநகர் மாவட்டம் கொளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் - கண்ணமங்கலம் ஆகிய 6 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் 11 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

22. 37 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 50 புதிய நீர்தாங்கி வண்டிகள்.

23. தீ மற்றும் உயிர் மீட்புப் பணிகளில் புதிய தொழில்நுட்ப நுணுக்கங்களை செயல்படுத்தத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் ‘தீ ஆணையம்’ (Fire Commission) ஒன்று புதிதாக அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மீதமுள்ள அறிவிப்புகளை நான் இந்த அவையில் படித்ததாகப் பதிவு செய்து அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கூறிய அறிவிப்புகள் அடங்கியுள்ள “அறிவிப்பு புத்தகம்” அச்சிடப்பட்ட பிறகு எனது அலுவலகத்தில் சந்தித்த சில காவலர்கள், காவல்துறை அதிகாரிகள் சில கோரிக்கைகளை என்னிடத்தில் எடுத்து வைத்தார்கள். அதை மனதில் வைத்து, அதிகாரிகளோடு நான் கலந்து பேசி, - இந்த அவையில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு புத்தகத்தில் உள்ளவற்றையும்

தாண்டி மூன்று புதிய அறிவிப்புகளை இப்போது நான் வெளியிட விரும்புகிறேன்.

* இரவுப் பணிக்குச் செல்லும் பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக - இரவு ரோந்துப் பணிக்கு செல்லும் அனைத்து காவல் ஆளிநர்கள் மற்றும் காவல் ஆய்வாளர் வரையிலான அதிகாரிகளுக்கு சிறப்புப் படியாக மாதம் 300 ரூபாய் வழங்கப்படும்.

* ஏற்கனவே காவல் ஆளிநர்களுக்கு வார விடுமுறை அளிக்கும் நடைமுறை பின்பற்றப்படுவதை தொடர்ந்து தற்போது 15 நாட்களுக்கு ஒரு முறை உதவி ஆய்வாளர்கள் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர்களுக்கு ஒரு நாள் விடுப்பு (OFF) வழங்கப்படும். இதனால் 10 ஆயிரத்து 508 பேர் பயனடைவார்கள்.

* இணையவழி சூதாட்டத்தில் ஈடுபட்டுப் பலரும் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதற்கான காரணங்களை அறியும் பொருட்டு மாநில குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் கண்காணிப்பாளர் (எஸ்.பி) தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ள, கோரிக்கை எண். 22 காவல் பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான வெட்டுத் தீர்மானங்களையும், கோரிக்கை எண். 23 மீது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்து வெட்டுத் தீர்மானங்களையும் நான் படித்துப் பார்த்தேன். அவை விதிகளுக்குட்பட்டு இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக, உறுதியாக நிதிநிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்ற அரசு உறுதியாகப் பரிசீலிக்கும்.

எனவே, நான் ஏற்கனவே கூறியது போல மக்களைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறை மற்றும் தீயணைப்புத் துறைகளின் தேவைகளை, கோரிக்கைகளை இந்த அரசு உறுதியாக உரிய முறையில்

நிறைவேற்றித் தரும். அவற்றுக்குப் போதிய விளக்கங்களை என்னுடைய பதிலுரையிலும் அளித்திருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் என்னுடைய அந்த விளக்கத்தை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம்!

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**